**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**

**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**

**15 ஏப்ரல் 2016 / 07 ரஜப் 1437**

# <u>வணக்க வழிபாட்டுச் செயல்களின் மூலம் பணிவை வளர்த்துக் கொள்வது</u>

اَلْحَمْدُ لِلَّهِ الَّذِي أَرْسَلَ رَسُوْلَهُ بِالْهُدَى وَدِيْنِ الْحَقِّ بَشِيْرًا وَنَذِيْرًا
وَدَاعِيًا إِلَى اللَّهِ بِإِذْنِهِ وَسِرَاجًا مُنِيْرًا وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللَّهُ
وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ
وَصَفِيُّ اللَّهِ مِنْ خَلْقِهِ وَحَبِيْبُهُ إِمَامُ الأَنْبِيَاءِ وَسَيِّدُ الْمُرْسَلِيْنَ اَللَّهُمَّ
صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَ عَلَى آلِهِ وَصَحْبِهِ وَسَلِّمْ تَسْلِيْمًا كَثِيْرًا.
أَمَّا بَعْدُ فَيَا عِبَادَ اللَّهِ اتَّقُوْا اللَّهَ حَقَّ تُقَاتِهِ وَلاَ تَمُوْتُنَّ إِلاَّ وَأَنْتُمْ
مُسْلِمُوْنَ

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே! அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீதான நமது "தக்வா" (பக்தியை) அதிகரித்துக் கொள்வோமாக! அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் அனைத்து கட்டளைகளுக்கும் கட்டுப்பட்டு நடப்போம் எனவும், அவன் தடுத்துள்ள விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வோம் எனவும் நாம் எடுத்துள்ள உறுதிமொழியை புதுப்பித்து, உறுதிசெய்து கொள்வோமாக! புதுப்பிக்கப்படும் அவ்வுறுதிமொழி நமது நடத்தையையும்

தனிதன்மையையும் மேற்கொண்டு சிறப்பாக்கும் என நம்புகிறோம். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீதான நமது நம்பிக்கையை மேற்கொண்டு உறுதியாக்கும் எனவும் நம்புகிறோம்.

அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே!
கடந்த வாரங்களின் குத்பா பிரசங்கங்களில் அல்லாஹ் மற்றும் அவனது அனைத்து படைப்புகளுடனான நமது உறவை மேம்படுத்திக் கொள்வதற்கு "பணிவு" எனும் பண்பு எந்த அளவு அவசியமானது என விவாதிக்கப்பட்டது. இவ்வாரத்தில், நமது அன்றாட வணக்க வழிபாட்டுச் செயல்களும், கர்வம் மற்றும் அகந்தைக்கு நாம் இரையாகி விடாமல் நம்மைப் பாதுகாக்கின்றன என்பதைச் சிந்தித்துப் பார்க்குமாறு உங்களையும் என்னையும் கேட்டுக் கொள்கிறேன். அவ்வாறு சிந்தித்துப் பார்த்தால், இவ்வணக்க வழிபாடுகள் நம்மை நன்மைகளைச் செய்யவும், நம்மை நாம் முன்னேற்றிக் கொள்ளவும் தூண்டும்.

அன்பிற்குரிய எனது சகோதரர்களே!
நாம் அன்றாடம் நிறைவேற்றி வரும் வணக்க வழிபாட்டுச் செயல்கள் மற்றும் சடங்குகளில் உண்மையாகவே நாம் சிந்தித்துப் பார்த்தால் அச்செயல்கள் நம்மில் பணிவை உருவாக்குவதாகவும், சுயநலம் மற்றும் அகந்தையை நம்மை விட்டும் அகற்றுவதாகவும் இருப்பதைக் காணலாம்.

நமது வணக்க வழிபாட்டுச் செயல்களில் ஒன்று "ஸலாத்" (தொழுகை) ஆகும். உதாரணமாக, தொழுகையில் தக்பீர் கட்டுவதற்காக நமது கைகளை உயர்த்தும் போது, நமது சொத்துக்கள், நமது சமூக அந்தஸ்துகள், நமது தொழில், திறமைகள் மற்றும் நிபுணத்துவம் அனைத்தையும் தற்காலிகமாக உதறி விட்டோம் எனும் சிந்தனை நமக்கு ஏற்படும்.

காரணம், அந்நேரத்தில் "அல்-மாலிக்" எனும் அனைத்துக்கும் அதிபதியாகிய அல்லாஹ்வை முன்னோக்கிய நிலையில் நாம் இருப்போம். நமது உடல் மற்றும் ஆன்மீகம் சம்பந்தமான ஒவ்வொரு அசைவும் பின்வரும் பிரார்த்தனையை ஆழமாக உணர்வதாக இருக்கும்:

قُلْ إِنَّ صَلَاتِي وَنُسُكِي وَمَحْيَايَ وَمَمَاتِي لِلَّهِ رَبِّ الْعَالَمِينَ

பொருள்: நீர் கூறும்: "மெய்யாக என்னுடைய தொழுகையும், என்னுடைய குர்பானியும், என்னுடைய வாழ்வும், என்னுடைய மரணமும் எல்லாமே அகிலங்களின் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே சொந்தமாகும். (அல்-குர்ஆன்: அத்தியாயம்: அல்-அன்ஆம், வசனம்: 162)

அடுத்து, அல்லாஹ்வுக்கு நாம் உச்சகட்டமான பணிவைத் தெரிவித்துக் கொள்ளும் வகையில் நமது தலையை பூமியில் வைத்து "ஸஜ்தா" (சாஷ்டாங்கம்) செய்யும் போது பின்வரும் பிரார்த்தனையைச் செய்கிறோம்:

سُبْحَانَ رَبِّيَ الأَعْلَى وَبِحَمْدِهِ

பொருள்: மிக்க உயர்ந்தவனாகிய எனது இரட்சகனை நான் மேன்மைப்படுத்துகிறேன். அவனது புகழைக் கொண்டு அவனைத் துதி பாடுகிறேன்.

எனது சகோதரர்களே!

எனவே, அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவுக்கு நன்றி செலுத்துவதை நாம் அதிகரித்துக் கொள்வோமாக! நாம் ஏதாவதொரு அருளை, பாராட்டை அல்லது பரிசைப் பெரும் போது பின்வரும் பிரார்த்தனைகளைச் செய்ய மறந்து விடக் கூடாது. **"ஹாதா மின் ஃபள்லி ரப்பீ"** (இது எனது இறைவன் எனக்கு அளித்துள்ள சிறப்புகளில் ஒன்றாகும்), **"மாஷா அல்லாஹ்**

**லாகுவ்வத இல்லா பில்லாஹ்**” (அல்லாஹ் நாடியது நடந்துள்ளது; அனைத்து ஆற்றலும் அல்லாஹ்விடமிருந்தே பெறப்படுகிறது)

நான் மேற்கூறிய அனைத்து கருத்துக்களும் நாம் தற்பெருமை மிக்கவர்களாக இருக்கக் கூடாது என நமக்கு நினைவூட்டுகின்றன. மேலும், அனைத்து அருள்களும் புகழ்களும் ”அர்ராஜிக்” ஆகிய அனைவருக்கும் உணவழிக்கும் அல்லாஹ் சுப்ஹானஹூ வதஆலாவுக்கே உரியன எனவும் நினைவூட்டுகின்றன.

அன்பிற்கினிய ஜமாஅத்தார்களே!

நாம் அல்லாஹ்வுக்கு அடிபணிந்து நடப்பதுடன் நமது பெற்றோர்களிடமும் பணிவாக நடக்க வேண்டுமெனப் போதிக்கப்பட்டுள்ளோம். அவர்கள் நமக்காகச் செய்துள்ள தியாகங்கள் மற்றும் நம்மீது கொண்ட அன்பை மறந்து விடக் கூடாதெனவும் நினைவூட்டப்படுகிறோம். நமக்கு உதவி செய்தவர்களுக்கு நாம் எப்போதும் நன்றி தெரிவிப்பவர்களாக இருப்பது அவசியமாகும். அப்போது தான், நாம் மற்றவர்களைச் சார்ந்துள்ளோம் என்ற உணர்வு நமக்கு ஏற்படும். அந்நிலையில், நாம் மேற்கொண்டு அவர்களின் கிருபையையும் உதவியையும் புரிந்தவர்களாக ஆகுவோம்.

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் ஹதீதில் நவின்றுள்ளார்கள்:

மனிதர்களுக்கு நன்றி செலுத்தாதவர்கள் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தியவர்களாக ஆக மாட்டார்கள். (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் அஹ்மது ரஹ்)

மேற்கண்ட ஹதீது, நாம் பலஹீனமானவர்கள் என்பதையும், நிம்மதியாக வாழ்வதற்கு அடிக்கடி மற்றவர்களின் உதவிகளின் பால் நாம்

அவசியமானவர்களாக உள்ளோம் என்பதையும் சுட்டிக் காட்டுகிறது. நாம் ஒரு காலத்தில் உதவிகளற்று, பலஹீனமானவர்களாக இருந்தோம்; அல்லாஹ் நமக்கு குடும்பத்தார்களையும் பெற்றோர்களையும் அருளினான்; அவர்கள் நம்மீது பாச மழை பொழிந்தார்கள். நம்மீது அக்கறை செலுத்தி, நமது சுக, துக்கங்களில் பங்கு கொண்டு, நமது அந்தஸ்தை உயர்த்தினார்கள் என்பதையும் நினைவூட்டுகின்றது. எனவே, ஒவ்வொரு தொழுகைக்குப் பின்பும் நமது பெற்றோர்களுக்காக பின்வருமாறு துஆச் செய்ய மறந்து விடக் கூடாது:

رَبِّ اغْفِرْ لِي وَلِوَالِدَيَّ وَارْحَمْهُمَا كَمَا رَبَّيَانِي صَغِيْرًا

பொருள்: இரட்சகா! என்னையும் எனது பெற்றோர்களையும் மன்னிப்பாயாக! நான் சிறியவனாக இருந்த போது என் மீது பாச மழை பொழிந்து கிருபையுடன் என்னை வளர்த்ததைப் போல் அவர்களுக்கும் நீ கிருபை காட்டுவாயாக!

எனவே, நாம் இன்று சுயமாக வாழும் ஆற்றலைப் பெற்றுள்ள நிலையில் ஆணவம் பிடித்தவர்களாக, தற்பெருமைமிக்கவர்களாக ஆகி விடக் கூடாது. நாம் உதவிகள் அதிகமாகத் தேவைப்படும் நிலையில் இருந்த போது அல்லாஹ் நமக்கு உதவி, அருள் புரிந்தது போல், தேவையுள்ளவர்களுக்கு உதவுவோமாக! எனவே தான், "ஸதகா" (விருப்ப தர்மம்), "ஜகாத்" (கட்டாய தர்மம்) ஆகியவற்றை வழங்குமாறும், அவற்றின் மூலம் அல்லாஹ் நமக்கு அருளியுள்ள அருள்களை, உபரியான செல்வங்களை மற்றவர்ளுடன் பகிர்ந்து கொள்ளுமாறும் அல்லாஹ் நமக்குப் போதித்துள்ளான்.

ஜமாஅத்தார்களே!

நாம் எப்போதும் அல்லாஹ்வுக்கு நன்றி தெரிவிப்பவர்களாக இருப்பது அவசியம் என நினைவூட்டப்படுவது போல், தற்போது "ரஜப்" மாதத்திலே நாம் காலடி எடுத்து வைத்துள்ளோம்; இஸ்லாத்தின் "அஷ்ஹுருல் ஹுரும்" எனப்படும் நான்கு புனிதமிக்க மாதங்களில் இதுவும் ஒன்றாகும்; எனவே, நமது நற்காரியங்களையும், வணக்க வழிபாட்டுச் செயல்களையும் அதிகரித்துக் கொள்வது அவசியமாகும் என நான் எனக்கும் உங்களுக்கும் நினைவுபடுத்த விரும்புகிறேன். "ரஜப்" மாதத்தின் பெயரைக் கேட்டதும், "ரமதான்" மாதத்துக்கு நெருக்கமாக நாம் உள்ளோம் என்பதும் நமது நினைவுக்கு வருகிறது. எனவே நாம் உற்சாகத்துடன் வணக்க வழிபாடுகளைப் புரியவும், தேவைப்படுவோருக்கு உதவவும் தயாராக இருக்க வேண்டும். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா நமது நற்காரியங்களை ஏற்றுக் கொள்வானாக! ரமதான் மாதத்தைச் சந்திக்கும் அரிய வாய்ப்பை வழங்குவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوْهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.